# திருவள்ளுவரின் அறஉணர்வுக்கோட்பாடும் பயன்பாட்டு நெறிமுறைக் கோட்பாடும்

16

**ஜேம்ஸ் குட்டி ஜோசப்**

**சுப்பிரமணிய பாரதியார் தமிழியர் புலம்**

**புதுச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி 605 014**

Jkaroor@dvk.in

**ஆய்வுச்சுருக்கம்**

அறம் என்பது வெறும் சமூக ஒழுங்கை மட்டுமல்ல, தனி மனிதனின் வாழ்க்கை உயர்வுக்கும் வழிவகுக்கும் என்று திருவள்ளுவர் நம்புகிறார். அறத்தின் நான்கு தூண்களாக நீதி, உண்மை, கருணை, கடமை ஆகியவை உள்ளன. அறத்தின் விளைவுகளாக சமூகஅமைதி, தனிநபர் மகிழ்ச்சி, ஆன்மீக விடுதலை, நன்மை பயக்கும் செயல்கள் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கையில் திருவள்ளுவர் நேர்மையான வாழ்க்கை மற்றும் தன்னடக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இது பயன்பாட்டு நெறிமுறையில் முதன்மை கவனம் பெறவில்லை. திருவள்ளுவரின் தத்துவம் பெரும்பாலும் மகிழ்ச்சி மற்றும் துன்பத்தின் கணக்கீட்டைத் தாண்டி உலகளாவிய உண்மைகள் மற்றும் நெறிமுறை கொள்கைகளைப் பற்றி பேசுகிறது.

**ஆய்வு நோக்கம்**

பயன்பாட்டு நெறிமுறைக் கோட்பாடு(Utilitarianism)வழி திருவள்ளுவரின் அறம் சார்ந்த உணர்வுகளை ஆய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

இகல், பயன்பாட்டு நெறிமுறைக்கோட்பாடு, இணங்குதல், செந்நெறி

**முன்னுரை**

திருக்குறள், அறநெறிமுறைகள் குறித்த ஞானத்தின் ஒரு பெரிய களஞ்சியம். மனித வாழ்க்கை பிறப்பு மற்றும் மரணத்திற்கு இடையேயான ஒரு பயணம் என்பதை உணர்த்துகிறது. இந்தப் பயணத்தில் நம்மை வழிநடத்தும் ஒளியே அறம். அறம் என்பது சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அடிப்படை தத்துவம். இதன் மூலம் மனிதர்கள் ஒன்றாக வாழும் ஒரு

சீரான சூழலை உருவாக்க முடியும். அறம் என்பது வெறும் சமூக ஒழுங்கை மட்டுமல்ல, தனி மனிதனின் வாழ்க்கை உயர்வுக்கு வழிவகுக்கும் என்று திருவள்ளுவர் நம்புகிறார். பயன்பாட்டு நெறிமுறைக் கோட்பாடு(Utilitarianism)வழி திருவள்ளுவரின் அறம் சார்ந்த உணர்வுகளை ஆய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது. பயன்பாட்டு நெறிமுறை **(Utilitarianism)** என்பது, அதிகமான மக்களுக்கு அதிகபட்ச மகிழ்ச்சி மற்றும் நலனைத் தரும் செயல் நெறிமுறையானது என்று கூறும் ஒரு நெறிமுறை தத்துவம்.

**அறத்தின் நான்கு தூண்கள்**

திருவள்ளுவர் தம் குறள்களில் 'அறம்' என்பதை வாழ்வின் அடிப்படை நெறியாகக் கூறுகிறார். இது வெறுமென ஒரு நல்லொழுக்கக் குறியீடு மட்டுமல்ல; வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் ஆளும் ஒரு பரந்த கொள்கை. தனி மனிதனின் நன்னடத்தை மட்டுமல்லாமல் சமூக நலனுக்கும் முக்கியமான அறத்தின் நான்கு தூண்களைப் பார்ப்போம்.

1. **நீதி**

திருவள்ளுவர் நீதியை அறத்தின் அடித்தளமாகக் கருதுகிறார். அனைவருக்கும் சமமாக அவர்களின் நிலை பாலினம் அல்லது சாதியைப் பொருட்படுத்தாமல் நியாயமான நடத்தை தேவை என்பதை கு.111 மூலம் வலியுறுத்துகிறார்.

2. **உண்மை**

அறமான வாழ்க்கைக்கு உண்மை மிக முக்கியம் (296). பொய்யைத் தவிர்ப்பது (293) நேர்மையான நடத்தை (291) சமூகத்திற்கு நம்பிக்கையை உருவாக்குவது ஆகியவை அறத்தின் அங்கம். ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான் (கு.294) என உறுதி அளிக்கிறது. அத்தகையவன் நம்பிக்கைக்குரியவன் என்றுதான் உணர முடிகிறது.

3. **கருணை**

இரக்கம் மற்றும் அனுதாபம் கொண்ட மனப்பான்மை அறத்தின் முக்கிய அம்சம். தேவைப்படுபவர்களுக்கு உதவுவது (கு.223) மற்றவர்களின் துன்பங்களைப் புரிந்துகொள்வது (கு106) ஆகியவை ஒரு அறிவாளியின் இயல்பு.

4. **கடமை**

அறம் என்பது தனது கடமையை உணர்ந்து அதை நிறைவேற்றுவதாகும். அதாவது ஒவ்வொருவரும் தங்கள் கடமையை நிறைவேற்றுவது (211) சமூகத்தில் சமநீதியை

நிலைநாட்டுவது ஆகியவை மிக முக்கியம் என்கிறது(111). இதற்கு உதாரணமாக மன்னன் தனது மக்களுக்கு நன்மை செய்யும் கடமை (385, 541, 549) பொதுமக்கள் சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டிய கடமை (119) குழந்தைகள் பெற்றோருக்கு ஆற்றவேண்டிய கடமை (70) குடும்பத்திற்கு (1021 1023) சமூகத்திற்கு (215) நாட்டிற்கு எனப் பல கடமைகள் திருக்குறளில் குறிப்பிடப்படுகின்றன. இயற்கைக்கும் கூட (731 737) பல அளவுகளில் கடமை இருக்கிறது.

**அறத்தின் விளைவுகள்**

**1.சமூக அமைதி**

அறம் சமூகத்தில் அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துகிறது. மனிதர்கள் நெறிமுறையான வாழ்க்கை வாழும்போது போருக்குக் காரணமாகிய பகையை ஒரு நாளும் மனதில் வைத்திருக்கக் கூடாது. (கு.853) போருக்கான சூழ்நிலைகள் தோன்றினாலும் அதைத் தவிர்த்தல் வேண்டும். பகைமை என்னும் துன்பம் செய்யும் நோயை தன் மனதில் இருந்து நீக்குவானாயின் ஒருவனுக்கு அச்செயல் வருத்தம் இல்லாத புகழை கொடுக்கும் என்று திருக்குறள் எடுத்துரைக்கிறது.

**2. தனிநபர் மகிழ்ச்சி**

அறம் தனிப்பட்ட மகிழ்ச்சியைத் தருகிறது. ஒருவர் நெறிமுறையான செயல்களைச் செய்யும்போது அவர்களின் மனசாட்சி தெளிவாக இருக்கும். எல்லா உயிர்களிடத்திலும் இணங்கிச் சேராமல் இருக்கும் தீய குணத்தை வளர்க்கும் நோயே இகல்-மனவேறுபாடு என்று கூறுவர். அதை நீக்கினால் இன்பம் பிறக்கும். (கு.854)

**3. ஆன்மீக விடுதலை**

திருவள்ளுவர் அறத்தை ஆன்மீக விடுதலைக்கான பாதை என்கிறார். இறைவனைப் பின்பற்றி ஐம்புலன்களையும் தன்னலங் கருதாச் செந்நெறியில் செலுத்தி பயன்கருதாப் பணியாற்றுவோரை கவலை பீடிக்காது (கு.7) இதற்கு மாறான நிலையில் செல்வோர் மனக் கவலையிலிருந்து விடுதலை பெறாது தவிப்பர்.

**4. நன்மை பயக்கும் செயல்கள்**

தானம்(221) பொது நலன்(615) தன்னலமற்ற சேவை (613) போன்ற விடயங்கள் திருக்குறளில் நன்மை பயக்கும் செயல்களாகக் கருதப்படுகின்றன.

**திருவள்ளுவரின் பயன்பாட்டு நெறிமுறைக் கோட்பாடு**

திருவள்ளுவரின் தத்துவம் பயன்பாட்டு நெறிமுறையுடன் சில ஒற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் முக்கிய வேறுபாடுகளும் கொண்டிருக்கிறது. திருவள்ளுவர் நேர்மையான வாழ்க்கை மற்றும் தன்னடக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இது பயன்பாட்டு நெறிமுறையில் முதன்மை கவனம் பெறவில்லை. திருவள்ளுவரின் தத்துவம் பெரும்பாலும் மகிழ்ச்சி மற்றும் துன்பத்தின் கணக்கீட்டைத் தாண்டி உலகளாவிய உண்மைகள் மற்றும் நெறிமுறைக் கொள்கைகளைப் பற்றி பேசுகிறது.

**முடிவுரை**

தத்துவப் பார்வையில் திருக்குறளில் அறம் சமூகத்திற்கும் தனி மனிதனுக்கும் முக்கியமானது. அது பண்புடைய சமூகத்தை உருவாக்க உதவுவதுடன் அறத்தைப் பின்பற்றுவதால் மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கை சாத்தியமாகும். சமூக நலன் மற்றும் தனிப்பட்ட நலன் இரண்டையும் திருக்குறள் சமமாக முக்கியத்துவப்படுத்துகிறது. இன்றும் இந்தக் கருத்துகள் பலருக்குப் பயனைத் தருகின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. அரங்க இராமலிங்கம்.டாக்டர். பேராசிரியர். திருக்குறள் களஞ்சியம், வர்த்தமான் பதிப்பகம் சென்னை 2020.
2. தாமரைச்செல்வி தி. “தமிழர் அறக் கோட்ப்பாடு” ஆ. அறிவு நம்பி (தொகுப்பாசிரியர்) வான்புகழ் வள்ளுவம் சுப்பிரமணிய பாரதி தமிழர் புலம், புதுச்சேரி 2004.
3. பாண்டுரங்கன் அ. “இந்திய சிந்தயாளர்களும் திருவள்ளுவரும்” ஆ. அறிவு நம்பி(தொகுப்பாசிரியர்) வான்புகழ் வள்ளுவம் சுப்பிரமணிய பாரதி தமிழர் புலம், புதுச்சேரி 2004.
4. பெருஞ்சித்தனார் பாவலரேறு. திருக்குறள் மெய்ப்பொருளுரை. தென்மொழி பதிப்பகம், சென்னை 2006.
5. மாணிக்கம் வா. சுப. வள்ளுவம். சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2020.
6. Eggleston, Ben. *Utilitarianism: With Related Remarks from Mill's Other Writings*. London: Hackett Publishing Co, Inc. 2017.